**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.**

**CC.No. 333/2020 Date: 17.11.2025**

**PW 2 : திரு.கிருஷ்ணராஜ் த/பெ. சின்னப்பன்**

துவக்க நேரம் 01.01 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள காப்புக்காட்டிற்குரிய சர்வே எண்ணை இவ்வழக்கு கோப்பில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை, அந்த தேதியில் சர்வே எண் குறித்த Notification எங்களுக்கு கொடுக்கப்படவில்லை. அனுமானத்தின் பேரில் தான் சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்தன்று அதனை காப்புக்காடு என்று குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை, GPS ல் புகைப்படம் எடுக்கும்பொழுது அது காப்புக்காடு என்று வரும், மேலும் அந்த நிலத்தில் செடிகள் நட்டுள்ளோம், காப்புக்காடு என்பதற்கு ஆவணங்கள் எதுவும் அந்த தேதியில் இல்லை.

2) சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்தன்று சம்பவயிடத்தில் எதிரிகளை பார்த்தோமா என்றால் இரண்டு நபர்கள் ஓடினார்கள், அவர்கள் எதிரிகளா என்று தெரியாது. சம்பவத்தை, எதிரிகள்தான் செய்ததாக பொதுமக்கள், எங்களுக்கு தகவல் கொடுத்தார்கள் என்று சொல்லியுள்ள நிலையில், அந்த பொதுமக்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது.

3) எதிரிகள் குறித்த தகவலை பொதுமக்கள் சொன்னார்கள் என்று எந்த ஆவணத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, மகஜர் ஸ்டேட்மெண்டில் சொல்லியுள்ளோம். அவ்வாறு தகவல் சொன்ன பொதுமக்களிடமிருந்து நாங்கள் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) எரிந்த இடத்திலிருந்து சாம்பல், எரிந்தும் எரியாமலும் இருந்த மரத்துண்டுகளை நாங்கள் கைப்பற்றினோமா என்றால் இல்லை, முழுவதும் தீக்கிரையாகிவிட்டது. ஒப்புதல் வாக்குமூலத்திலும், மகஜர் ஸ்டேட்மென்டிலும், "இன்று 08.04.2018 " என்றுதான் எழுதப்பட்டுள்ள என்றும், கடந்த 08.04.2018 என்று எழுதப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். ஆனால் மேற்படி இரண்டு ஆவணங்களையும் 11.04.2018 அன்று தயார் செய்ததாக கையொப்பம் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான், எதிரிகள் தலைமறைவாகிவிட்டார்கள், 11.04.2018 அன்று எதிரிகளை பிடித்துவந்து அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதால் 11.04.2018 அன்று அதிகாரிகள் கையொப்பம் செய்துள்ளார்கள். ஒப்புதல் வாக்குமூலம், மகஜர் ஸ்டேட்மென்ட் ஆகியவற்றை பின்னிட்டு வழக்கிற்கேற்றவாறு நாங்கள் செய்துள்ளதால்தான், முன்னுக்கு பின் முரணாக தேதி குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

5) மகஜர் ஸ்டேட்மென்ட்ல் மேல் பக்கம் இன்று 08.04.2018 என்றும், அதே மகஜர் ஸ்டேட்மென்டில் கீழ் பக்கம் 11.04.2018 என்றும் குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான், நிகழ்வு நடந்தது 08.04.2018 என்பதால் மேலே எழுதும்பொழுது 08.04.2018 இன்று என்றும், பின்னிட்டு எதிரிகளை அழைத்துவந்து கடந்த 11.04.2018 அன்று ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதால் அந்த நாளை இன்று என்று குறிப்பிட்டுள்ளோம். மேற்படி "இன்று" என்ற வார்த்தைக்கு தவறான விளக்கத்தை கொடுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6) ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு வாங்கினேன் என்றால் அலுவலகத்தில் வைத்து வாங்கினேன். சம்பவயிடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

7) ஒப்புதல் வாக்குமூலத்தில் 05.00 மணி என்பது ஒயிட்னர் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், தவறாக எழுதிவிட்டு திருத்தப்பட்டிருக்கலாம். எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும், எங்களிடம், எதிரிகள் பற்றி பொதுமக்கள் யாரும் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று சொன்னாலும், வழக்கு சம்பவம் தொடர்பாக என் மேல் அதிகாரி என்னை கேள்வி கேட்டதால், யாராவது இரண்டு நபர்கள் மீது வழக்கு போடவேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கெதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

8) எதிரிகளை தலக்கரை கிராமத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னாலும், எதிரிகள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்று சொன்னாலும், எங்கள் அலுவலகத்தில் வைத்து வழக்கிற்கேற்றவாறு தவறான ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகளுக்கெதிராக தயார் செய்து, இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் நிரபராதிகள் என்றும், எங்களிடம் உள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து இவ்வழக்கினை எதிரிகளுக்கெதிராக பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.22 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.17 18:10:06 +0530

Judicial Magistrate No.2, Attur.